இது ஓர்
இலவச வெளியீடு
(இரண்டாயிரத்து ஐநூறு பிரதிகள்)

# நிலா

www.nilafrance.com

சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle
Métro : La Chapelle
☎ 01 44 72 08 94

புரட்டாதி - ஐப்பசி 2010 | இது ஓர் கிருஷ்ணா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 5



## பாரிஸ் பெரிய பாரிஸ் ஆகப்போகிறது புறநகர் நிலக்கீழ் ரயில் வருகிறது!

பாரிஸ் பிரதேசத்தில் போக்குவரத்தே முன்னுரிமை பெறும் அம்சமாக விளங்குகிறது. பாரிஸ் விருத்தி அடைகிறது என்றால், அது தொடர்வண்டி வழியான போக்குவரத்து வசதியை விருத்தி செய்கிறது என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். ஏனெனில் இலகுவான துரிதமான போக்குவரத்துச் சேவையிலே நாட்டின் இயங்குதிறன், முன்னேற்றம் தங்கியிருக்கிறது. இதற்காக ஒன்றரைக் கோடி யூரோ வருடந்தோறும் ஒதுக்கப்படுகிறது.

ஆர்க் எக்ஸ்பிரஸ் Arc Express எனப்படும் கடுகதி மெத்ரோ போக்குவரத்துச் சேவை பாரிசின் வடக்கிற்கும் தெற்கிற்கும் ஆரம்பிப்பதற்கான திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. இந்தச் சேவை மூலம் மெத்ரோ கடைசி நிலையங்கள் இணைக்கப்படும். மேலும் மூன்று மெத்ரோ நிலையங்கள் நீடிக்கப்பட உள்ளன. ட்ராம் வே, பேருந்து, RER ஆகிய போக்குவரத்துத்துறைகள் விஸ்தரிக்கப்பட இருக்கினறன.

### 2011 இல் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்

Créteil-Préfecture மெத்ரோ Créteil-Parc des Sports எனும் புதிய முடிவிடத்திற்கும், Porte de la Chapelle மெத்ரோ Proudhon-Gardinoux எனும் புதிய முடிவிடத்திற்கும், Porte d'Orléans மெத்ரோ Mairie de Montrouge எனும் புதிய முடிவிடத்திற்கும் நீடிக்கப்படுகின்றன.

இதேபோல் ட்ராம் வே T1 Saint-Denis க்கும் Asnières-Gennevilliers க்கும் இடையிலும், T2 La Défense க்கும் Pont de Bezons க்கும் இடையிலும், T3 Porte d'Ivry க்கும் Porte de la Chapelle க்கும் இடையிலும் நீடிப்பும் நவீனமயப்படுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.

(எஸ்.எஸ்)




## பிரான்சில் வீடுகள் பற்றாக்குறை, ஆனால் பல HLM வீடுகள் வெற்றிடம்!

வறுமைக் கோட்டின் கீழ் இருக்கின்றவர்களின் வீட்டு வசதி நன்மை கருதி HLM (Habitation à loyer Modéré) என்ற அரச நிறுவனம் இலட்சக்கணக்கான வீடுகளை நிர்மாணித்து பிரான்ஸ் முழுவதும் வாடகைக்கு விட்டுள்ளது. இதில் வறுமைக் கோட்டின் மேல் வருமானம் பெறுபவர்களின் ஒரு பகுதியினரும் நன்மை அடைந்து வருகின்றனர்.

அண்மையில் ஸ்ராஸ் பேர்க் (Strasburg) என்ற நகரில் HLM என்ற வதிவிட நிர்மாண நிறுவனத்தின் 71வது மகாநாடு நடைபெற்றது. ஸ்ராஸ்பேர்க்கில் உள்ள லு-மா என்ற இடத்தில் 10வீதம் தொடக்கம் 12வீதம் வரையான தொடர்மாடி வீடுகள் (Appartment) வெற்றிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பிரான்சில் 12 இலட்சம் (1,2மில்லியன்) வீடுகள்



கோரும் மனுக்கள் உள்ள நிலையில் பெருந்தொகையான வீடுகள் வெற்றிடமாக உள்ள நிலைமை HLM அமைப்பிற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் பிரான்சின் வீட்டு வசதி அமைச்சர் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான வீடுகளுக்கான கோரிக்கைகள் இல்லாத நிலை உள்ளதாகவும் மேற்குறித்த சதவீத எண்ணிக்கை நாட்டினது சரியான கணிப்பீட்டைக் குறிப்பிடவில்லை என்றும் கூறி கண்டனங்களை மறுத்துள்ளார். சில இடங்களில் வீடுகள் கோரிய மனுக்கள் குறைவாக இருக்கின்றபடியால் இப்படியான நிலைமைகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று HLM அமைப்பின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.



கிருஷ்ணா அச்சகம்

தரம் - குறித்த தவணை - நியாயவிலை

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
E-mail: krishnafrance@yahoo.com



73, Rue Doudeauville - 75018 PARIS Métro : CHÂTEAU ROUGE



## பிரான்ஸில் 10 வருடங்களின் பின்னர் கொலையாளி கண்டுபிடிப்பு

1996ம் ஆண்டில் 69 வயதுடைய வில்லி பொமன்ரி (Willi Pomanti) என்பவரின் வீட்டுள் நுழைந்த கள்வன் மின்சார துளையிடும் கருவியால் (Driller) துளைத்து சித்திரவதை செய்து அவரைக் கொன்றுள்ளான். இச் சம்பவம் பிரான்சின் செல்-சென்-குளோட் என்ற இடத்தில் இடம்பெற்றிருந்தது. கொலை நடந்த உடன் அவரின் வீட்டிலிருந்தே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பொலிசாரின் தொடர்ச்சியான ஆய்வுகளுக்கும் தேடுதல்களுக்கும் பின்னர் கொலையாளி கைது செய்யப்பட்டுள்ளான். இக் கொலையில் இருவர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை பொலிசார் அறிந்திருந்தனர். கொலைசெய்யப்பட்ட இடத்தில் புகைத்துவிட்டு வீசி எறியப்பட்ட சிகரட் துண்டு ஒன்று பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது. சிகரட் துண்டில் இருந்து அவரது உடற்கூற்று அடையாள எண் (DNA) கணிக்கப்பட்டு தேசிய பதிவுத் திணைக்களத்தில் அரசின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தது.

களவு மற்றும் மோசடி செய்து குற்றம் சாட்டப்பட்டு 2006ம் ஆண்டில் மிசல் அம்றா(Michal Ambras) என்பவர் கைது செய்யப்பட்டு பொலிசாரின் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அந்த வேளையிலேயே இவரது உடற்கூற்று அடையாள எண்ணும் 1996இல் இடம்பெற்ற கொலையில் சம்பந்தப்பட்டவரின் (DNA) எண்ணும் ஒன்றாக இருந்தது கண்டறியப்பட்டது. கொலைச் சம்பவம் பற்றி மிசல் அம்றாவிடம் விசாரித்தபோது இவர்தான் கொலையாளி என்பதும் 2வது கொலையாளி 2005ம் ஆண்டில் இறந்துவிட்டான் என்பதும் தெரியவந்துள்ளது. 10 வருடங்களின் பின்னர் கொலையாளி கண்டுபிடிக்கப்பட்டு 5 ஆண்டுகளாக வழக்கு நடைபெற்று 16.09.2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒருவன் கொலைசெய்கின்றபோது தன்னை அறியாமலே எப்போதும் ஆகக் குறைந்தது ஒரு தடயத்தையாவது விட்டுச்செல்வான் என்ற நீதிக் கோட்பாட்டை இச்சம்பவம் மீண்டும் வலியுறுத்துவதாக உள்ளது.





அழைப்பிதழ்கள்
இந்திய விலைகளுக்கீடாக
பெற்றுக்கொள்ளலாம்

லாச்சப்பலில்

சங்கீதா அச்சகம்

39, Bd de la Chapelle
01 44 72 08 94




## பாரிசில் Pousse – Pousse - மின்சார ரிக்ஸா அறிமுகம்

பாரிஸ் நகரத்தின் மூன்று முக்கிய நிலக்கீழ் ரயில், தொடருந்து நிலையங்களில் பயணிகளின் இடப்பெயர்வை துரிதப்படுத்தி உதவுவதற்காக மின்சார மிதியிழுவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கார் துலியோன் ( Gare de Lyon) , ஒஸ்த்எர்லிற்ஜ் ( Austerlitz), பேர்சி ( Bercy) ஆகிய மூன்று நிலக்கீழ் ரயில், தொடருந்து நிலையங்களில், ஒரு நிலையத்திலிருந்து இன்னொரு நிலையத்திற்கு குறுகிய நேரத்தில் போகும் மக்களுக்கு உதவுவதற்காக ரிக்ஸா என அழைக்கப்படக்கூடிய "புஸ் - புஸ்" ( Pousse – Pousse) சேவைக்கு விடப்பட்டுள்ளது. இதில் பயணம் செய்வதற்கான கட்டணம் ஐந்து யூரோக்கள் மட்டுமே..

(எஸ். எஸ்)



## பிரான்சில் உள்ள யூறோ-டிஸ்னியில் 3 வது பிரிவை ஆரம்பிக்க முயற்சி

பிரான்சில் மான் - லா - வலே (Marne - la-Valle) என்ற இடத்தில் ஐரோப்பாவிற்கான பொழுதுபோக்கு பூங்கா 1992 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
இதுவரை 2 கோடியே 15 இலட்சம் மக்கள் (215 மில்லியன்) இந்த பூங்காவிற்கு சென்று வந்துள்ளனர். இந்த தொகை இலங்கையில் உள்ள மக்கள் தொகையை விட கூடுதலானதாகும்.
யூறோ - டிஸ்னி பூங்காவை விரிவுபடுத்துமுகமாக பிரான்ஸ் அரசுக்கும் ஈறோ - டிஸ்னிக்கும் இடையில் அண்மையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதற்காக நூற்றுக்கணக்கான ஏக்கர்களை இந்த விளையாட்டு பூங்காவோடு இணைக்க பிரான்ஸ் அரசு அனுமதி வழங்குகின்றது. எதிர்வரும் 20 ஆண்டுகளில் 800 கோடி யூரோக்கள் யூறோ டிஸ்னியால் முதலீடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேரடியாக அல்லது அதனோடு இணைந்த 70,000 வேலை வாய்ப்புக்கள் புதிதாக ஏற்படுத்தப் படும் என்று யூறோ டிஸ்னி, அரசுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை தெரிவித்துள்ளது.



நயினை அபிவிருத்திக்கழகம் பிரான்ஸ் நடாத்தும்

**நயினைச் சுடர்-1**

30.10.2010ல் இடம்பெறுகின்றது.

# அவெனியு - சாம்ஸ் - எலிசே இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.



ஐரோப்பாவின் அதிகூடிய விலை உள்ள பகுதியாக இருந்த அவெனியு - சாம்ஸ் - எலிசே பகுதி தற்போது இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. ஆனால் உலகின் மிக அழகான வீதி என்ற பெயரைத் தொடர்ந்து தக்கவைத்துள்ளது.

இலண்டனில் உள்ள நியூ பொண்ட் வீதி (New Bond Street) புதிய கணிப்பீடுகளின் படி ஐரோப்பாவில் அதி கூடிய விலையுள்ள பகுதியாக தற்போது உள்ளது. ஒரு சதுர மீற்றருக்கு வருட வாடகை 7345 யூரோ ஆக உள்ளது. இப்பகுதி ஒரு வருடத்தில் 20வீத விலையுயர்வை அடைந்துள்ளது. அதே நேரத்தில் சாம்ஸ் - எலிசே பகுதி 9,5வீதத்தில் விலை குறைந்து தற்போது ஒரு சதுரமீற்றருக்கான வருடவாடகை 6965 யூரோவாக உள்ளது. பாரிஸ் மாநகரசபை புதிதாக, விலைஉயர்ந்த உடுப்புக் கடைகளை திறக்க கட்டுப்பாடுகளை விதிப்பதன் காரணமாகவே சாம்ஸ் எலிசே பகுதி 2வது நிலைக்கு பின்தள்ளப்பட்டுள்ளதாக அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

# வங்கிகளின் சேவைக்கட்டணங்கள் குறைக்க கோரிக்கை

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பிரான்ஸ் வங்கிகள் அதிகளவாக சேவைக் கட்டணங்களை அறவிடுவதாக பாவனையாளர்கள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது. இவர்களின் கோரிக்கைகளை செவிமடுத்த பிரான்சின் பொருளாதார அமைச்சர் கிறிஸ்ரின் லகார்ட் (Christine Lagarde) கோரிக்கைகள் மீது கவனம் செலுத்துவதாகவும் கட்டணங்களைக் குறைக்க ஆவன செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது வங்கிகள் வருட முடிவில் கட்டாயமாக வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வங்கிச் சேவைச் செலவுகளை தெரியப்படுத்த வேண்டும் என்று சட்டம் உள்ளது. இதை மாதாந்தம் தெரியப்படுத்தவேண்டும் என்று பாவனையாளர் சங்கம் வலியுறுத்துகின்றது. வங்கிகள் 300 இற்கும் மேற்பட்ட விலைகளை மிகவும் சிறிய எழுத்துக்களில் அச்சிட்டு வங்கி வாடிக்கையாளர்கள் புரிந்துகொள்ளமுடியாத நிலையில், பெயருக்கு தங்கள் விலைப்பட்டியலை அனுப்பி வைக்கின்றன.

இதற்குத் தீர்வாக சாதாரண மக்களும் பயன்படுத்தும் 10 அதிமுக்கிய வங்கிக் கட்டண சேவையின் விலைகளை தெளிவாக தெரிவிக்கும்படி வங்கிகள் அரசாங்கத்தினால் கேட்டுக்கொள்ளப்பட உள்ளன.

பணம் இல்லாத நிலையில் காசோலை திரும்பும் போதும் வங்கி அட்டையில் காசு எடுக்கும் போதும் ஏற்படும் வங்கிச்சேவைக்கட்டணங்களை குறைக்கவும் சீராக்கவும் வேண்டும் என்று பொருளாதார அமைச்சர் தெரிவிக்கின்றார். 2011ம் ஆண்டு யூன் மாத முடிவிற்குள் வங்கிகள் இவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும்




என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

தற்போது வங்கி அட்டை ஒன்றிற்கு வருடாந்த கட்டணமாக 0 யூரோவில் இருந்த 48யூரோ வரை வங்கிகளைப் பொறுத்த வரை செலுத்த வேண்டியுள்ளது. வங்கிகளின் வருமான விபரங்களை பார்வையிடும் போது 40 வீத வருமானம் வங்கிக் கட்டணங்கள் மூலமாகப் பெறப்படுவதாகத் தெரியவருகின்றது.

# துயர் பகிர்வு



தோற்றம்: 22.06.1958
மறைவு: 02.04.2010
அமரர் சுப்பிரமணியம் இராசலிங்கம்



தோற்றம்: 07.07.1943
மறைவு: 02.07.2010
அமரர் இராஜசூரியர் யோகரட்ணம்



தோற்றம்: 18.06.1958
மறைவு: 22.07.2010
அமரர் சுப்பையா கங்காதீஸ்வரன்



தோற்றம்: 03.05.1936
மறைவு: 25.07.2010
அமரர் க. பாலசுப்பிரமணியம்



தோற்றம்: 18.02.1959
மறைவு: 31.07.2010
அமரர் சிற்சபேசகுருக்கள் உமாசுதசர்மா



தோற்றம்: 05.09.1951
மறைவு: 28.08.2010
அமரர் சதாசிவம் பாலசிங்கம்



தோற்றம்: 30.07.1931
மறைவு: 12.09.2010
அமரர் குணலஷ்மி கனகசுந்தரம்



தோற்றம்: 12.08.1940
மறைவு: 1.10.2010
அமரர் துரைராஜா வேலுப்பிள்ளை



தோற்றம்: 05.12.1977
மறைவு: 14.09.2010
அமரர் நாகராசா ஞானேஸ்வரன்



பிரான்ஸ்

# கல்வி முறை

பிரான்சில் கல்வியானது பாலர் வகுப்பை உள்ளடக்கிய ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளது.
ஆரம்பக் கல்வி நான்கு ஆண்டுகள் பாலர் கல்வியை உள்ளடக்கியதுடன் மேலும் CP - CE1 -CE2 - CM1 - CM2 என ஐந்து வருடங்களையும் கொண்டிருக்கின்றது. முதல் நான்கு ஆண்டுகளான பாலர் கல்வி குழந்தைகளுக்கு கட்டாயப்படுத்தப்பட்டதல்ல. CP தொடக்கம் CM2 வரையிலான 5 வருடங்கள் ஆரம்பக்கல்வியில் கட்டாயப்படுத்தப்பட்ட படிநிலைகள் ஆகும்.

இதன் பின்னர் இடைநிலைக்கல்வி கல்லூரியில் (Collège) 6e, 5e, 4e, 3e வரை நான்கு வருடங்கள் தொடரப்படவேண்டும். இங்கு குறிப்பிடப்படுகின்ற 6e என்ற 6ம் வகுப்பு இலங்கையில் உள்ள 6ம் வகுப்பை ஒத்ததாகும். பிரான்சிலும், இலங்கையிலும் வித்தியாலயம் அல்லது கல்லூரியில் ஆரம்பிக்கின்ற முதலாவது ஆண்டாகும். இலங்கையில் 12ம் ஆண்டின் பின்னர் க.பொ.த (உயர்தரப் பரீட்சை) எடுப்பது போல் பிரான்சிலும் பாலர் வகுப்பு தவிர்த்த 12 ஆண்டின் பின்னர் பல்கலைக்கழகங்கள் உட்பட உயர்நிலைக் கல்விக்குச் செல்கின்ற முறை இலங்கையின் கல்வி முறையை ஒத்ததாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் கல்வி நிலையின் பெயர்கள் மாறுபடுகின்றன.

கல்லூரியில் 6ம் வகுப்பில் ஆரம்பகால நான்கு ஆண்டுகள் படித்த பின்னர் BREVET என்ற பரீட்சை (இலங்கை 9ம் வகுப்பை ஒத்தது) கல்வித் திணைக்களங்களில் பிரெஞ்சுமொழி, கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம், என நான்கு பாடங்கள் பொதுப் பரிட்சை முறை மூலம் நடத்தப்படுகின்றது. ஆனால் இதன் பெறுபேறுகள் வகுப்பேற்றலில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது.

6e, 5e, 4e, 3e ஆண்டுகள் முடிந்தபின்னர் மாணவர்கள் இரண்டு பெரும் பிரிவுகளுக்கு பிரிந்து செல்கின்றனர். ஒரு பகுதியினர் தொழிற்கல்விக்கும், மற்றைய பகுதியினர் உயர் நிலைக் கல்விக்கும் தயார் நிலைப்படுத்தப்படுகின்றனர்.
தொழில் கல்விக்குச் செல்பவர்கள் BFP (Brevet d'Etudes Professionnelles) அல்லது CAP (Certificat d'Aptitude professionnelle) இரண்டு வருடங்கள் செய்தபின்னர் தொடர்ந்து வேலை செய்யலாம். அல்லது விஞ்ஞானம் சம்பந்தமாக தொழில் நுட்பப் பகுதிக்குச் செல்லலாம்.
உயர் நிலைக்கல்விக்குச் செல்பவர்கள் Lycée Général அல்லது Lycée technologie என இரண்டு பிரிவுகட்கு உட்படுத்தப்படுகின்றனர். இவர்கள் 2nd, 1er, Terminal என 3 வருடங்கள் கல்வி கற்கின்றனர். அதாவது ஆரம்பக் கல்வியில் 5 வருடங்களும் (Ecole Elémentaire) கல்லூரியில் (College) 4 வருடங்களும் lycée இல் 3 வருடங்களுமாக Ecole Maternelle இல் நான்கு வருடங்கள் நீங்கலாக 12 ஆண்டுகள் கல்வியைப் பெறுகின்றனர். 12ம் ஆண்டு இறுதியில் Baccalauréat பரிட்சையில் சித்தி யடைபவர்கள் பல்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டு பட்டதாரிகளாக பொறியியலாளர்களாக, வைத்தியக் கலாநிதிகளாக, கணக்காய்வாளர்களாக, நிர்வாகிகளாக தங்கள் மேற்படிப்பைத் தொடர்கின்றனர்.

இலங்கையைப் போன்று உயர்கல்வி, பல்கலைக்கழகத்துடன் பெரும்பகுதி மட்டுப்படுத்தப்படாமல், பிரான்சில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு பல்வேறுபட்ட கல்வி நிறுவனங்கள் உள்ளன. பல்கலைக் கழகத்துடன் Grandes Ecoles என்ற உயர் பள்ளிகளும் இரண்டாண்டுகளில் போட்டி பரீட்சைக்கு உள்ளாகின்ற Classe Préparatoires போன்ற வழிகளும் உள்ளன.
இவை எல்லாவற்றிற்கும் மேலாக ENA (Ecole National Administration) , Polytechnique போன்ற உயர்பெறுபேறு களுடன் செல்கின்ற கல்வி நிறுவனங்களும் பிரான்சில் பிரசித்தி பெற்றுள்ளவையாகும்.
(இவற்றிற்கான மேலும் கூடுதலான விபரங்களை வரைபடத்தில் காணலாம்.)



**LYCÉE PROFESSIONNEL OU CFA**

| MC / BP / BMA / BTM | | |
|---|---|---|
| | Terminale Prof. | |
| | Première Prof. | |
| CAP 2e année CAP | BEP Terminale BEP | ▶ |
| 1e année CAP | Seconde Prof. | |

**LYCÉE GENÉRAL ET TECHNOLOGIQUE**

| BAC TECHNOLOGIQUE | BAC GÉNÉRAL | வயது அண்ணளவாக |
|---|---|---|
| Te Technologique | Te générale | 18 |
| 1e Technologique | 1re générale | 17 |
| 2nd Générale et Technologique | | 16 |

Diplôme national du Brevet

**Secondaire — COLLÈGE - கல்லூரி**

| | | | | வயது |
|---|---|---|---|---|
| 4 | 3e SEGPA | Troisième | 3ம் வகுப்பு | 15 |
| 3 | 4e SEGPA | Quatrième | 4ம் வகுப்பு | 14 |
| 2 | 5e SEGPA | Cinquième | 5ம் வகுப்பு | 13 |
| 1 | 6e SEGPA | Sixième | 6ம் வகுப்பு | 12 |

**Élémentaire — ÉCOLE ÉLÉMENTAIRE - ஆரம்ப பாடசாலை**

| | | | |
|---|---|---|---|
| 5 | Cours moyen 2e année (CM2) | நடுத்தரவகுப்பு ஆண்டு 2 | 11 |
| 4 | Cours moyen 1e année (CM1) | நடுத்தரவகுப்பு ஆண்டு 1 | 10 |
| 3 | Cours élémentaire 2e année (CE2) | அடிப்படை வகுப்பு ஆண்டு 2 | 9 |
| 2 | Cours élémentaire 2e année (CE1) | அடிப்படை வகுப்பு ஆண்டு 1 | 8 |
| 1 | Cours Préparatoire (CP) | ஆயத்த வகுப்பு | 7 |

**Pré-élémentaire — ÉCOLE MATERNELLE - பாலர் பாடசாலை**

| | | | |
|---|---|---|---|
| 4 | Grande section | பெரிய குழந்தைகள் பகுதி | 6 |
| 3 | Moyenne section | நடுத்தர குழந்தைகள் பகுதி | 5 |
| 2 | Petite section | சிறிய குழந்தைகள் பகுதி | 4 |
| 1 | Année des tout petits | பாலர் வகுப்பு | 3 |

# வெந்தயத்தின் மகிமை

இன்றைய காலகட்டத்தில் அதிநவீன மருத்துவ சிகிச்சைகளுக்கு சவால் விடும் வகையில் புதுப்புது நோய்கள் மனிதனை தாக்கிக் கொண்டிருக்கின்றன.

இதனால் ஆரோக்கிய வாழ்வில் அனைவரும் அக்கறை காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பணக்கார நோய் என்று சொல்லப்படும் சர்க்கரைநோய், இருதய நோய், சிறுநீரக நோய் போன்றவைகள் கூட தற்போது ஏழை எளியவர்களையும் எளிதாக தாக்கிவிடுகின்றது.

இந்த நோய்களை சீராக்க முடியாமல் தவிக்கும் நமக்கு இந்த வெந்தயம் பெரும் உதவி புரிகின்றது.

இந்தவகையில் நம்வீட்டுச் சமயலில் தினசரி வெந்தயத்தை பயன்படுத்துங்கள். வெந்தய கீரையையும் பயன்படுத்துங்கள். இந்த வெந்தயமானது உடல் உஷ்ணத்தைக் குறைக்கின்றது. மூலநோய்க்கு கருணைக் கிழங்குடன் சேர்த்து சாப்பிட்டால் அதன் வலி குறைவடைகின்றது. குழந்தை பெற்ற தாய்மாருக்கு அரிசியுடன் வெந்தயத்தையும் இட்டு கஞ்சி செய்து குடித்து வந்தால் தேவையான அளவு தாய்ப்பாலை பெறமுடியும். அது மட்டும் அல்லாது வயிற்றுப்போக்கு, வயிற்றுப் பெருக்கு, வெள்ளைபடுதல் போன்ற வற்றுக்கும் மேற்கண்டவாறு சாப்பிட்டு வரலாம். இவ் வெந்தயம் ஆனது சிறுநீரிலும் இரத்தத்திலும் சர்க்கரையின் அளவைக் குறைக்கும் வேலையையும் செய்கின்றது. இதனால் வெந்தயத்தை தினமும் நம் சமையல் அறையில் பயன்படுத்தி பலன் பெறுங்கள்.

- திருமதி நிர்மலன்

---



## முகப்பருவா?

முகப்பருவை நீக்கவும், தடுக்கவும் கீழ்க்காணும் வழிமுறைகள் உங்களுக்கு உதவும் :

- முகத்தை ஷோப்புப் போட்டு வெதுவெதுப்பான தண்ணீரால் அடிக்கடி கழுவுங்கள்
- முகத்தில் பவுடர் பூசுவதையும், அழகு சாதன கீரிம்கள் உபயோகப்படுத்துவதையும் தவிருங்கள்.
- சுத்தமான காற்றும், சூரிய ஒளியும் முகத்திற்குதேவை
- கொழுப்பு நிறைந்த அசைவ உணவுகளையும், நெய், வெண்ணெய், கேக், ஐஸ்கிரீம், சாக்லெட், பாலாடை போன்றவற்றையும் ஒதுக்குங்கள்.
- கீரை மற்றும் பச்சை காய்கறிகளை நிறைய சாப்பிடுங்கள்.
- தினமும் இரண்டு லீற்றருக்கு குறையாமல் தண்ணீர் குடியுங்கள்.
- மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- பருக்களை கிள்ளுவது கூடாது.
- பருக்களின் மேல் பூசுவதற்கு பலவித கீரிம்கள் கிடைக்கின்றன. அவற்றை தேர்வு செய்வதற்கு மருத்துவரின் உதவியை நாடுங்கள்

## வட்டிலப்பம் (Dessert)



தேவையான பொருட்கள்

முட்டை 04

சர்க்கரை 1/2 Kg

தடிப்பான தேங்காய்ப்பால் 1/2 கப்

வனிலா, கறுவா, ஏலம் - சிறிதளவு

செய்முறை

பாலில் சக்கரையைக் கரைத்து அதனுள் அடித்த முட்டையை சேர்த்து நன்றாக அடிக்கவும். பின் கறுவா ஏலம் பவுடராக்கி சேர்க்கவும். பின் ஒரு பாத்திரத்தில் விட்டு நீராவியில் அவிக்கவும். குளிரூட்டியில் வைத்து பரிமாறலாம்.

தகவல் : அமரா

## நட்பு



மழலைப் பருவத்தில்
பார்த்து வியக்க
ஒரு நட்பு..

குழந்தைப் பருவத்தில்
ஓடி விளையாட
ஒரு நட்பு..

காளைப் பருவத்தில்
ஊர் சுற்ற
ஒரு நட்பு..

வாலிபப் பருவத்தில்
பேசி ரசிக்க
ஒரு நட்பு..

முதிர்ந்த பின்
அனுபவங்களைப்
பகிர்ந்துகொள்ள
ஒரு நட்பு..

நட்புகள் ஆயிரம்
இருந்தும்
நட்பின் தேவை
குறையவில்லை

தேவையின் போது
தோள்களில் சாய
நட்பு வேண்டும்

துன்பத்தின் போது
கண்ணீர் துடைக்க
நட்பு வேண்டும்

மகிழ்ச்சியின் போது
மனம் மகிழ
நட்பு வேண்டும்

நானாக நானிருக்க
நட்பே..
நீ எனக்கு
நட்பாக வேண்டும்

- ஜெகன்

## நிலாவினைப் பெற்றுக்கொள்ள

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**RUBIS**
10, Rue Labat - 75018 PARIS

**MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIE**
26, Rue Perdonnet - 75010 PARIS

**Sachi Education**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS Coiffure**
5B Avenue Alexis Varagne-95400 Villiers Le Bel

**மாலா மளிகை**
4 Place de Salengro- Garges Les Gonesse Sarcelles

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 PARIS

## பாரீஸில் தமிழர் நிகழ்வுகள்

- **தேர்த்திருவிழா**

பாரீஸ் மாணிக்க விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா 29.08.2010 அன்று நடைபெற்றது.

- **மணிவிழா**

கவிஞர் வண்ணைதெய்வத்தின் மணிவிழா 19.09.2010 Sevran மண்டபத்தில் இடம்பெற்றது.

- **பவளவிழா**

மூத்த கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்களின் பவளவிழா 25.09.2010 அன்று பாரிசில் இடம்பெற்றது

- **திரைப்பாட்டுத் திருவிழா**

**சங்கரின் சாதகப் பறவைகள்**

வர்த்தக ஸ்தாபனங்களின் அனுசரணையுடன் 26.09.2010 இல் பாரிசில் இடம்பெற்றது.

- **பரதநாட்டிய அரங்கேற்றம்**

செல்வி. மிதுலா பஞ்சலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் 19.09.2010 ஞாயிறு அன்று Garges les Gonese இல் இடம்பெற்றது.

- **வரவேற்பு விழா**

புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அவர்களின் குருத்துவ வெள்ளிவிழாவை முன்னிட்டு 03.10.2010 அன்று பாரிசில் அவருக்கு பத்திரிசியார் கல்லூரி பழையமாணவர்களால் வரவேற்பு அளிக்கப்பட்டது..

மகாஜனக்கல்லூரியின் நூற்றாண்டு விழா கல்லூரியின் பழையமாணவர்களால் இந்த ஆண்டு உலகெங்கும் கொண்டாடப்படுகிறது

# பிளாஸ்ரிக் பாற்புட்டி எச்சரிக்கை!



Bisphénol A எனப்படும் ஒரு வகை இரசாயனப்பொருள் (வேதியியல் பொருள்) சேர்க்கப்பட்ட பிளாஸ்டிக்கை பயன்படுத்தி தயாரிக்கப்படும் பால் புட்டிகளினால் சிறு குழந்தைகளுக்கு பல விதமான நோய்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக முன்னர் பிரான்ஸைச் சேர்ந்த l'Assoociation santé environnment மற்றும் L'Agence française de sécurité sanitaire des aliments (AFSSA) என்ற அமைப்புக்களினால் தெரிவிக்கப் பட்டிருந்தது. தற்போது l'Agent européenne pour la sécurité des aliments (AESA) விடுத்திருக்கும் அறிக்கையின்படி இந்த இராசயனப்பொருளினால் எவ்வித பாதிப்புக்களும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் secrétaire d'Etate à Ecologie அரசாங்க தாவரவியல்துறை அதிகாரி விடுத்திருக்கும் அறிக்கையின் படி தொடர்ந்தும் பால் புட்டிகளில் Bisphénol A எனப்படும் இரசாயனப் பொருள் சேர்ப்பதற்கான தடை பிரான்ஸில் தொடர்ந்து இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடாவில் 2008ம் ஆண்டுமுதல் பால் புட்டிகளில் இந்த வகை இரசாயனப் பொருள் சேர்ப்பது தடைசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# TVA

## இணையம் தொலைக்காட்சி தொலைபேசி ஒருங்கிணைந்த சந்தாதாரரின் விலை உயர்கின்றது.

இணையம் - தொலைக்காட்சி - தொலைபேசி மூன்றினதும் மாதாந்த விலை தற்போது 30 யூரோக்களிலிருந்து உள்ளது. அதன் மதிப்புக் கூடுதல் வரி (TVA) 5,6% ஆக உள்ளது. அரசு இந்த வரியை 5,6 % இல் இருந்து 19,6 % ஆக உயர்த்த ஆலோசித்து வருகின்றது.
உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தவிலை உலகின் அதி குறைவான விலையாக உள்ளதாக பிரான்ஸ் தொலைத்தொடர்பு கூட்டமைப்பின் இயக்குனர் தெரிவித்துள்ளார். வரி உயர்வின் பின்னர் இந்த முக்கூட்டின் விலை அண்ணளவாக 32 யூரோக்களிலிருந்து இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
தற்போது பிரான்சில் 2 கோடி சந்தாதாரர் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விலை ஏற்றத்தின் பின்னர் அரசுக்கு வரிமூலம் 50 கோடி யூரோக்கள் வருமானம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# கடந்த 8 வருடங்களின் பின் பரிசில் அதிகரித்த வன்முறை




இந்த வருடத்தின் முதல் 8 மாதத்தில் பாரிசில் பதிவான குற்றங்கள் எண்ணிக்கை 1.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு கடந்த 8 வருடத்தின் பின்பாக நிகழ்ந்துள்ளது. கடந்த 8 வருடத்தில் வன்முறைகள் குறைந்த வந்த போதும், இந்த தீடிர் குற்ற அதிகரிப்பு புதிய சமூக நெருக்கடிகளைப் பிரதிபலிக்கின்றது. இந்த அதிகரித்த குற்றங்கள், அனைத்து துறை சார்ந்தாக உள்ளது.

இதனால் எற்பட்ட சேதாரங்கள் 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் துப்பாக்கி மூலமான வன்முறை 29 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 35 சதவீதமான குற்றங்கள் 18 வயதை அடையாத இளம் வயதினரால் நடத்தப்பட்டது பதிவாகியுள்ளது.


# Nanterre

## நந்தேர் நகரம் புதுப் பொலிவு பெறுகிறது!



30 வருடங்களாக எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் நந்தேர் - லாடிபன்ஸ் பகுதிகளுக்கு இடையில் ஆரம்பமாகி உள்ளது. 15ம் திகதி செப்ரெம்பரில் நந்தேர் நகரசபை தனது முதலாவது கல்லை பதித்து தனது பணிகளை ஆரம்பித்திருக்கின்றது.

1974ம் ஆண்டில் தற்காலிக புகையிரத நிலையம் என்று நந்தேரில் அமைக்கப்பட்டது. அது 30 வருடங்களின் பின்னர் தற்போது நவீன முறையில் அமையவுள்ளது. இங்கு புகையிரதம், RER, Bus, Tramway அத்துடன் சைக்கிள் போக்குவரத்துக்களும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.
ஆனால் இவற்றின் நிர்மாண வேலைகள் 2014 ஆண்டளவில் தான் நிறைவுபெறும்.
லாடிபன்ஸ் பகுதியில் நகரசபையில் மேலும் 300 ஏக்கர்கள் இணைக்கப்பட்டு வர்த்தக வளாகங்கள், அரச பணியிடங்கள், வீடுகள், ஹொட்டல்கள் என்பன அமையவுள்ளன.
அத்துடன் இரண்டு நகரங்களுக்கும் இடையில் அரேனா 92 (Arena 92) என்ற பெயரில் 40000 பார்வையாளர்கள் உள்ளடக்கக் கூடிய மாபெரும் அரங்கம் ஒன்றும் அமையவுள்ளது.
இந்த அரேனா - 92 அரங்கத்தின் கூரை மடிக்கக் கூடியதாக அல்லது சுருக்கக் கூடியதாக அமைய உள்ளமை மிக முக்கியமானதாகும்.
இந்த அபிவிருத்தி வேலைகள் மிகப் பிரமாண்டமான நிகழ்வுகளை நடாத்தவும் மற்றைய நகரங்களுடன் கூடுதலான தொடர்புகளைப் பேணவும் வழிவகுக்கும் என்று ரீதியில் எதிர்பார்க்கப்படுகின்றது.




# விஸ்தரிக்கப்பட்ட பாரிஸ்

## *150 வருடகொண்டாட்டத்தையொட்டி நிழற்படக்காட்சியகம்*


*1860ம் ம் ஆண்டில் 1 தொடக்கம் 12 வரையான வட்டாரங்களே பாரிசில் இருந்தன. அவ்வேளையில் பாரிஸ் நகரை பெரிதுபடுத்துமுகமாக மேலதிகமாக 8 வட்டாரங்களை இணைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. இது 1815ம் ஆண்டின் பின்னர் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானம் ஆகும். இதற்கிணங்க 13ம், 14ம், 15ம், 16ம், 17ம், 18ம், 19ம், 20ம் வட்டாரங்கள் பாரிசுடன் இணைக்கப்பட்டன.*

இதற்கிணங்க பேர்சி(Bercy), லா வில்லத் (La Villette), மொன்மார்த் (Montmarte) என்பன பாரிஸில் இணைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

*பாரிசின் 1 இலிருந்து 12 வரையான வட்டாரங்கள் மிகுந்த பாதுகாப்பைக் கொண்டிருந்தன. ஜனவரி 1860ம் ஆண்டு தீர்மானத்தின் படி சில சுவர்கள் இடிக்கப்பட்டு பல வீதிகளின் பெயர்கள் மாற்றப்பட்டதோடல்லாமல் கட்டடங்களின் இலக்கங்களும் மாற்றப்பட்டன. அத்துடன் வட்டாரங்களின் இலக்கங்களும் மாற்றப்பட்டன. தற்போது பாரிசின் மையப்பகுதி முதலாவது வட்டாரமாகவும் அடுத்து வலது பக்கமான முதலாவது சுற்றிலும் இரண்டாவது சுற்றிலும் மீதி 19 வட்டாரங்களும் அமைந்துள்ளன.*

பாரிஸ் நகரம் உலகின் அதிக சன நெருக்கமான நகரங்களுள் ஒன்றாகவும் ஐரோப்பாவின் மிகவும் சிறிய நகரமாகவும் விளங்குகின்றது. அத்துடன் உலக அதிசயங்களில் ஒன்றான ஈபிள் கோபுரத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளதாகவும் உள்ளது.

இந்த 150வது வருட கொண்டாட்டத்தை ஒட்டி நிழற்படக் காட்சியகம் ஒன்று திறக்கப்பட்டு ஒக்டோபர் 24 வரை பொதுமக்கள் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது.




நூலகம், 22 Rue Malher - 75004 Paris
பிரவேசம் - 4யூரோ

---

# தடுப்புக் காவல் சட்டமூலத்தில் திருத்தம்! பிரான்ஸ் அரசு முயற்சி

பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்படுவோரின் எண்ணிக்கையை குறைக்கவும், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நேரத்தைக் குறைக்கவும் பிரான்ஸ் அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

பொலிசார் தடுத்து வைக்கப்படுவோரின் வாக்குமூலங்களைப் பெறுகின்ற வேளைகளில் குற்றஞ் சாட்டப்பட்டவரின் சார்பாக ஒரு சட்டத்தரணி தற்போது அரைமணி நேரம் இருக்க முடியும்.

ஆனால் பொலிசார் வாக்குமூலம் எடுக்கின்ற முழுநேரமும் சட்டத்தரணி குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஆலோசனைக்கு இருக்க புதிய சட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்படவுள்ளது.

இந்த சட்டமூலங்கள் வாயிலாக பொலிசார் தங்களின் பெறுமதியான நேரத்தை இழக்க நேரிடும் என்றும், சட்டத்தரணிகளை பொலிஸ் நிலையங்களில் வரவேற்க போதிய இடவசதிகள் இல்லாமல் இருப்பதாகவும் தேசிய பொலிஸ் அலுவலகத்தின் சங்கத் தலைவர் டொமினிக் தனது அதிருப்தியினை தெரிவித்துள்ளார்.

தற்போது பிரான்சில் கைது செய்யப்படும் ஒருவர் பொலிஸ் தடுப்புக்காவலில் 24 மணிநேரம் பொலிசாரால் தடுத்து வைக்க முடியும். இந்த 24 மணி நேரத்தை 12 மணி நேரமாகக் குறைக்கவும் அரசு ஆலோசனை செய்கின்றது.

பிரான்சில் கடந்தவருடம் 7 90 000 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது. இந்த சட்டமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் பாதிக்கப்படுபவர்கள் பயனடைவர் என்று அரசு தெரிவிக்கின்றது.

ஐரோப்பிய மற்றைய நாடுகளான ஜேர்மனியில் 48 மணிநேரமும் ஸ்பெயினில் 72 மணிநேரமும் இத்தாலியில் 96 மணிநேரமும் ஒருவரை தடுப்புக் காவலில் பொலிஸ் தற்போது தடுத்து வைக்கமுடியும்.

இந்த சட்டமூலம் புரட்சிகரமானது என்று அரசும் பல பத்திரிகைகளும் புகழாரம் சூட்டுகின்றன.

ஆனால் பிரான்சில் ஆண்டொன்றிற்கு 75 பேருக்கு ஒருவர் ஐயத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அவரின் விபரங்களும் வாக்குமூலமும் கணனியில் பதியப்படுகின்றது. தடுப்புக் காவலில் நேரத்தைக் குறைப்பது என்ற போர்வையில் இரு மடங்கு மக்களின் விபரங்கள் வருடாந்தம் கணினியில் பதியப்பட நேரிடும் என்றும் சிலர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

சட்டமூலத்தில் உள்நோக்கம் இருக்கலாமா என்ற ஐயப்பாடும் எழுகின்றது. தடுப்புக்காவல் சட்டமூலம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் வாக்களிப்புக்காக விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிரிவு



அது
மரணத்தின்
வேறொரு பரிமாணம்
என் உயிர் நிலத்தில் நிற்க
உடல் வானில் பறந்தது -
உனைப் பிரிந்த விமானப் பயணம்
- சிவா



## லியோனார்ட் டா வின்சி

உலகப்பிரசித்தி பெற்ற இந்த அறிஞரின் முழுப்பெயர் லியோனாாட் டி ஸெர் பியரோ டா வின்சி என்பதாகும். வின்சி எனும் இடத்தைச் சேர்ந்த லியோனார்ட் என்பதே இவரின் நாமத்தின் விளக்கம்.

இத்தாலிய ஓவியரான டாவின்சி உலகமனிதராக வாழ்ந்தார். இந்தப் பகுத்தறிவாளர், கலைஞர், பொறியியலாளர், ஓவியர், கண்டுபிடிப்பாளர், உடற்கூற்றியல் அறிஞர், சிற்பி, கட்டடக்கலைஞர், தாவரவியலாளர், இசைவாணர், புலவர், தத்துவஞானி, எழுத்தாளர் என ஒரு பதினான்கு விதமான துறைகளில் வல்லுனராகத் திகழ்ந்தார்.

இத்தாலியில் நீண்டகாலம் வாழ்ந்திருந்தாலும், பிரான்சின் முதல் மாமன்னரான முதலாவது பிரான்சுவாவின் அன்பான அழைப்பின் பேரில், தன்வாழ்வின் கடைசி ஆண்டுகளை பிரான்சில் கழித்தார்.



நிலா இதழ்-4 ல் புகழ்பெற்ற மோனலீசா ஓவியம் பற்றிய குறிப்பில் ஓவியர் டாவின்சி பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரெனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

அக்கறையோடு தவறினைச் சுட்டியிருந்த நண்பர்களுக்கு நன்றி.

- நிலா


நிலா

விபரங்கள்தொடர்புகளுக்கு :

**சங்கீதா அச்சகம்**

**39, Bd de la Chapelle**

லாச்சப்பல்

**01 44 72 08 94**

---

**கிருஸ்ணா அச்சகம்**

73, Rue Doudeauville

*M°: Château Rouge*




### இவரை உங்களுக்கு தெரிகிறதா?

ரிற்றானிக் படத்தில் உருக்கமாக தன் கதையை விபரிக்கத்தொடங்கும் அந்த பாட்டிதான் இவர்.

*அண்மையில் தனது 100வது வயதில் காலமானார். செலிந்தியோனின் அற்புதக் குரலுக்கூடாக அவரை நினைவு கொள்வோம்.*


செய்திகளை உடனுக்குடன் பார்வையிட

**www.nilafrance.com**


வாழ்க்கை ஒரு சவால்
- அதனை எதிர்கொள்ளுங்கள்

வாழ்க்கை ஒரு பரிசு
- அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்

## I love you Dad

எனக்கு என் ஒரே மகன்மீது நிறைந்த பாசமிருந்தது. மனைவியின் பிரிவுக்குப்பின் அவன்தான் எனக்கு எல்லாமாயுமிருந்தான்.
அதுபோலவே அவனுக்கு நானும்.

எனக்கு ஐம்பது வயதானபோது அவனுக்கு பத்துவயதானது.

நான் ஒரு புதியகார் வாங்கினேன்.
பலகாலத்தின்பின் நான் வாங்கிய புதிய பொருள் அதுதான். காரை நான் ரசித்தேன். நன்றாகவே ரசித்தேன். காருடன் பலமணி நேரங்களைச் செலவுசெய்தேன்.
அடிக்கடி காரை துடைத்துக்கொண்டேன்.

ஒரு நாள் காரை நான் துடைத்துக் கொண்டிருந்தபோது எனது மகன் கிட்டவந்து என்னிடம் ஏதேதோ கதைத்தான்.
நான் செவிமடுக்கும் நிலையிலில்லை.
அவன் விலகிவிட்டான்.

சிறிது நேரம் கழித்துப்பார்த்தேன். அவன் காரின் மறுபக்கத்துக் கதவோரம் நின்று ஏதோ கிறுக்கிக்கொண்டிருந்தான். கையில் ஒரு சிறிய கல்.

எனக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை.
நான் என்னையிழந்தேன்.
அவன் பிஞ்சுகைகளைப்பற்றித் தரையிலிழுத்தேன். அவனைக் கண்டபாட்டிற்கு தரையில் போட்டு உதைத்தேன். அவன் அருகிலுள்ள முள்கம்பி வேலிக்குள் போய்விழுந்தான். அவன் கையில் ரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது.

நான் பதறிப்போனேன்.
எனக்கு சுயநினைவு வந்தது.
அவனை அள்ளி அணைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினேன். விரலில் பெரியகாயம். பெரிய அளவில் கட்டுப்போட்டு விட்டார்கள்.

நான் அவனைக் கொண்டு வந்து கட்டிலில் படுக்கவிட்டேன்.
அவன் தலையை வருடிவிட்டேன்.

"ராசா நோகுதா" என்றேன். என் கண்கள் கலங்கிப்போயிருந்தன.
அவன் என் நாடியை தடவினான்.
என்னால் முடியவில்லை.
எழுந்து கார் பக்கம் போனேன்.

அவனது கிறுக்கல் என் கண்ணிற்குத்தெரிந்தது. உற்றுநோக்கினேன். அதில் "ஐ லவ் யு டாட்" என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது.

- அசோகா

மூலம் : ரிஷபன்

# விளையாட்டுச் செய்திகள்

தொகுப்பு : ஜெகன்

## கிரான்ஸ்லேம் பட்டத்தை பெற்றார் நடால்



அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டியில் உலக முதல் நிலை வீரர் ரபேல் நடால் கிரான்ஸ்லேம் பட்டத்தை பெற்றார். 6-4, 5-7, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் உலக 3ஆவது நிலை வீரர் நொவெக் ஜோகோவிச்சை தோற்கடித்து வெற்றியை தனதாக்கினார். போட்டியின் ஆரம்பம் முதலே நடாலின் ஆதிக்கம் தொடர்ந்தது . 2 ஆம் செட்டை அவர் இழந்த போதிலும் 3ஆம் மற்றும் 4 ஆம் செட்களினை கைப்பற்றினார் நடால். இப் போட்டியில் 2ஆம் இடத்தினை பெற்ற சேர்பியாவின் நொவெக் ஜோகோவிச் அமெரிக்க ஓபன் இறுதிப் போட்டிகளில் பெறும் 2ஆவது தோல்வி இது வென்பது குறிப்பிடத்தக்கது. நடால் பெற்றுக்கொண்ட 9 ஆவது கிரான்ஸ்லேம் பட்டம் இதுவாகும். மேலும் அமெரிக்க ஓபன் பட்டத்தினை பெறுவது இதுவே முதல்முறையாகும். அமெரிக்க ஓபன் டெனிஸ் இறுதி போட்டியில் நொவிக் டிஜோவிக்கை நடால் எதிர்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

## பார்முலா — 1



இந்தியா மும்பாயில் முதன் முறையாக «பார்முலா-1» கார்பந்தய போட்டிகள் நடக்கவுள்ளன. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 20 கிராண்ட்பிரிக்ஸ் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டது இந்தியா சார்பில் இப்பந்தயத்தில் ரொயல் செலன் ஜர்ஸ் அணியின் உரிமையாளர் விஜய் மல்லையாவின் «போர்ஸ் இந்தியா» அணி பங்கேற்க உள்ளது. இந்தியாவில் «பார்முலா-1» போட்டிகள் நடக்கவிருப்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். இதில் பங்கேற்பதில் நாம் ஆர்வமாக இருக்கின்றோம். இதன் மூலம் இந்திய கார்பந்தய வீரர்களுக்கு சிறப்பான எதிர்காலம் கிடைக்கும் என விஜய் மல்லையா தெரிவித்துள்ளார்.

## சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும் அனெல்கா



சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளிலிருந்து தாம் ஓய்வுபெறுவதினை பிரான்ஸ் அணியின் முன்னணி வீரர் நிகொலஸ் அனெல்கா உறுதிசெய்துள்ளார். கடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் போது பிரான்ஸ் அணியின் அப்போதைய பயிற்றுவிப்பாளர் ரேமன்ட் டொமினிக்குடன் இவர் முரண்பட்டார். இதனால் அணியிலிருந்து தொடரின் இடை நடுவிலேயே அவர் மீள அழைக்கப்பட்டிருந்தார். மேலும் 18 சர்வதேச போட்டிகளில் விளையாடவும் தடைவிதிக்கப்பட்டார். 31 வயதான அனெல்கா தற்போது செல்ஸி கழக அணிக்காக விளையாடி வருகிறார். பிரான்ஸ் உதைபந்தாட்டச் சம்மேளனத்தைக் கடுமையாகச் சாடிய அனெல்கா பிரான்ஸ் அணிக்காக ஒருபோதும் தான் இனி விளையாடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## பாலியல் புகார்களில் சிக்கிய பிரான்ஸ் உதைபந்தாட்ட வீரர்கள்



பிரான்ஸ் உதைபந்தாட்ட முன்னணி வீரர்களான ரிபெரி மற்றும் பென்சமா ஆகியோர் பாலியல் புகார்களில் சிக்கியுள்ளனர். இவர்களில் ரிபெரி நடந்து முடிந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தார். குறிப்பிட்ட வயதெல்லைக்குக் குறைவான பெண்ணுடன் பாலியல் தொடர்பு கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்களுக்கு 40000 பவுண் பணமும் மூன்று வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. விபச்சாரமானது பிரான்ஸ் நாட்டு அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் எனினும் அந்தத் தொழிலுடன் தொடர்புடைய பெண் 18 வயதுக்கு மேற்பட்டிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெற் வாழ்விலிருந்து ஓய்வுபெறுகிறார் பிளின்டாப்



இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் பிளின்டாப் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். 2009ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை கைப்பற்றியதும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்ற பிளின்டாப், தற்பொழுது ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் கிரிக்கெட்டுக்கும் உடனடியாக விடைகொடுக்க போவதாக அறிவித்துள்ளார்.1998ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு காலடி வைத்த பிளின்டாப் 79 டெஸ்ட் விளையாடி 5 சதம் உள்பட 3845 ஓட்டங்களையும், 226 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார். 141 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 3394 ஓட்டங்களையும், 169 விக்கெட்டுகளும் கைப்பற்றி இருக்கிறார். இதே போல் ஏழு 20 ஓவர் கிரிக்கெட்டிலும் விளையாடி உள்ளார். மூட்டு காயத்தால் நீண்ட காலமாக அவதிப்பட்டு வரும் பிளின்டாப் அதற்கு சத்திர சிகிச்சை செய்தும் பயனளிக்கவில்லை.மீண்டும் கிரிக்கெட் போட்டிகளுக்கு திரும்பும் அளவிற்கு உடல் ஒத்துழைக்காத காரணத்தினால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி, தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

## கால்பந்து தரவரிசையில் 155ஆவது இடத்தில் இலங்கை

உலகக்கிண்ண உதைபந்தாட்ட தரவரிசையில் இலங்கை 155 ஆவது இடத்தை பெற்றுள்ளது. ஆசிய நாடுகளில் இலங்கை, நேபாளம் பங்களாதேஷம் ஆகிய நாடுகளிலிருந்து முன்னிலையில் உள்ளது. இருப்பினும் 1998 ஆம் ஆண்டு இலங்கை உலகக்கிண்ண உதைபந்தாட்ட தரவரிசையில் 122ஆவது இடத்தை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.




## இளைப்பாறும் வயதை நீடிக்கும் முடிவை எதிர்த்து பிரான்சில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

பிரான்சில் நாடு தழுவிய ரீதியில் செப்ரெம்பர் 7 செவ்வாய்க்கிழமை அன்று அரசுக்கெதிரான வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. போக்குவரத்து, அஞ்சல், தொலைபேசித்துறை ஆகியவற்றின் 50 வீதமானோர் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியுள்ளதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இளைப்பாறும் வயதை 60 வயதில் இருந்து 62 வயதாக உயர்த்துவதோடு காலக்கிரமத்தில் 67 வயதாக உயர்த்த நிக்கோலா சார்க்கோசியினது அரசு முயன்று வருகின்றது.

இதற்கு தொழிற் சங்கங்கள் வேறுபாடுகள் இல்லாமல் அரசுக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

7ம் திகதி இடம்பெற்ற போராட்டத்தில் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்குபற்றி ஓய்வுபெறும் வயதை உயர்த்துவதற்கான சட்டமூலத்தை இரத்துச் செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் அரசு, போராட்டக்காரரின் கோரிக்கைகளை புறந்தள்ளிவிட்டு சட்டமூலத்தை கொண்டுவர உள்ளதில் உறுதியாக இருப்பதாக தெரிய வருகின்றது.

நாட்டின் தொழில்அமைச்சர் எரிக் வோர்த் (Eric Woerth) கருத்துத் தெரிவிக்கையில், நடைபெற்ற போராட்டம் முக்கியமானது தான் என்றும், ஆனால் அரசு பிரெஞ்சு மக்களின் ஓய்வூதியத்தை தடையில்லாமல் அவர்களுக்கு செலுத்த தேவையான நடவடிக்கைகளை உரிமையுடன் எடுக்கும் என்றும் கூறியுள்ளார்.

### உலக அகிம்சை தினம்

ஐக்கியநாடுகள் சபை தீர்மானத்தின்படி ஒக்ரோபர் 2ம்திகதி உலக அகிம்சை தினமாக ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

"அகிம்சை என்பது வலிமையற்றவர்களின் ஆயுதமல்ல, வலிமையற்றவர்கள் வன்முறையை தான் தேர்வு செய்வார்கள் வலிமையானவர்களால் மட்டுமே அகிம்சையின் பாதையில் நடக்க முடியும். எதிரியை எழ முடியாமல் அடித்து வீழ்த்த வலிமை தேவையில்லை எந்த தாக்குதலையும் சமாளித்து எழுந்து நிற்கவே வலிமை தேவை" என்றார் காந்திஜி அவரின் பிறந்ததினமான ஒக்ரோபர் இரண்டே அகிம்சைதினமாக கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.




பாரிஸ் இந்திரா கணேஷின்
**சொல்லாமல் சொல்லிவிட்டாள்**
(சிறுகதைத் தொகுப்பு)
மணிமேகலைப்பிரசுரம்


**ரூபி**

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ பிரதிகளை நீண்ட காலத்திற்கு பாதுகாக்க விரும்புகின்றீர்களா? சீடி தட்டுக்களில் இலகுவாக மாற்றித்தருகிறோம்.
மற்றும்
**உங்கள் போட்டோ கொப்பி தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்!**

**10, RUE LABAT**
**75018 PARIS**
M°: Marcadet Poissonniers
**Tél.: 01 42 51 80 78**


### முதியோருக்கும் ஓர் தினம்!

மூத்த பிரஜைகளை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நோக்கி அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆண்டுதோறும் ஒக்டோபர் 1 ஆம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

6.




## மரியாதையான Bonjour மனம் காட்டுகிறது

«மொழி மக்களின் மனம், மனம் என்பது அவர்களின் மொழி» எனும் Johanan Herder( 1746 – 1803) இன் கருத்துக்கு அமைய, பிரெஞ்சு மொழி –La langue française பிரெஞ்சியர்களின் மனதை-பண்பாட்டை வெளிப்படுத்தும் மொழி. பொதுவாக, பிரெஞ்சுக்காரர்களின் உரையாடல்களில், '**bonjour –** *பொஸ்ஊ* **(நன்னாளாகுக-வணக்கம்), s'il vous plaît** *–ஸ்இல்வூப்ளே* **( தயவுசெய்து), merci –***மெர்ஸி* **(நன்றி), aurevoir-** *ஒவ்வா* **(மீண்டும் சந்திப்போம்)**' முதலான மரியாதைச் சொற்கள் இடம்பெறுவது பிரெஞ்சுமொழி மரபு. '**bonjour** *உம்* சொல்லாமல், **aurevoir***உம்* சொல்லாமல் உரையாடல் என்ற ஒன்று கிடையாது. (***bonjour = bon +jour. Bon –*** *நல்ல*, ***jour*** *நாள்*. **aurevoir=** ***au +re + voir. re –*** *மீண்டும்*, ***voir-*** *சந்தித்தல்,பார்த்தல்).*

ஒருவர் இன்னொருவருடன் முகம் கொடுக்க, கதைக்கத் தொடங்க,பழக்கத்தைப் புதுப்பிக்க, உறவை வளர்க்க மரியாதை செய்வது **Bonjour. Bonjour** என்று சொல்வதற்கு பஞ்சாங்கம் பார்த்து விட்டோ அல்லது ஐயரிடம் கேட்டுவிட்டோ சொல்ல வேண்டியதில்லை. எப்போதும் சொல்லலாம்.

(எஸ்.எஸ்)

7.

## ஆங்கிலமோ, பிரெஞ்சோ செம்மொழி இல்லை. ஆனால் தமிழ் .. !

உலக மொழியான ஆங்கிலமோ, ஆங்கிலத்துக்கு அடுத்த அந்தஸ்தில் இருக்கும் பிரெஞ்சோ **செம்மொழி** *(Classical language)* உயர்வு பெறவில்லை. ஆனால் இம்மொழிகள் பிறப்பதற்கு முன்பாகவே வழங்கி வரும் நமது தமிழ் மொழி செம்மொழி உயர்வு பெற்றிருக்கிறது.

உலகில் இன்று 6910 மொழிகள் வழங்கப்பட்டாலும், இம்மொழிகளில் *Classical language* ஆக விளங்குவன சின்னப்பிள்ளைகளும் விரல்விட்டு எண்ணக்கூடியன **தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன், சீனம், அரபி, பர்ஷியன்** ஆகிய ஏழு மொழிகளே ! சமஸ்கிருதமும் இலத்தீனும் இறந்த மொழிகள், தமிழும் சீனமுமே பெரிதும் மாற்றமடையாத தொன்மொழிகள்.

ஒரு மொழி செம்மொழியாக இருப்பதற்கான அடிப்படைப் பண்புகள் : (அ). தொன்மை. (ஆ). தொடர்ச்சி. (இ). செழுமை வளம். (ஈ). சொந்த இலக்கியம்.

(எஸ்.எஸ்)

# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

## பதிவுகள்

### 1. உடலை விற்று கல்வியைத் தொடரும் மாணவிகள்

'கற்கை நன்றே. கற்கை நன்றே... பிச்சை புகினும் கற்கை நன்றே ' என்று விறலி அவ்வையார் பாடிச்சென்றாலும், 'கற்கை நன்றே. கற்கை பயன்தரும் தன் உடலை விற்றென்றாலும் ' என பலநாடுகளில் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள் !


பிரான்சிலுள்ள 225 000 மாணவிகளில் 45 000 மாணவிகள் பணம் கொழிக்கும் விலைமாணவிகள் தொழில் மூலம் தம் பட்டப்படிப்பைத் தொடர்கிறார்கள் என Prostitution étudiante எனும் நூலை எழுதிய Eva Clouet குறிப்பிடுகிறார். இவ்விதமாக தன் பட்டப்படிப்பு படிக்கும் Laura D எனும் மாணவி Mes chères études எனும் நூலை அண்மையில் வெளியிட்டு பலமாணவிகளின் அவலக்கதையை வெளிக் கொணர்ந்திருக்கிறார்.

தங்கும் அறை வாடகைக்கு எடுக்க பொருளாதார வசதி இல்லாதவர்கள் அறைவைத்திருக்கும் மாணவர்களுடன் படுக்கையில் பங்கெடுப்பதன் மூலம் கற்கைகளைத் தொடர்கின்ற நடைமுறைகளும் உண்டு. வறுமை மாணவர்களுக்கும் உண்டு.



### 2. சீன மொழியில் குறள்

பைபிளை, குரானை ப் போல பல மொழிகளில் உலகப் பொதுமறையான திருக்குறளும் மொழி பெயர்க்கப்படுகிறது. இப்பொழுது திருவள்ளுவரின் 1330 குறள்களும் உலகக் கவிஞர் சங்கத்தின் கௌரவ தலைவரான தைவானிய சீன அறிஞரான யுஜீ அவர்களால் சீனமொழியில் மொழிபெயர்க்கப்படுகிறது. இம்மொழிபெயர்ப்பு 2010 இறுதியில் வெளியாகும் எனத் தெரிகிறது. இந்த அறிஞரை குறளை சீன மொழிப்படுத்த வேண்டியவரும் தூண்டியவரும் மனிதரில் மாணிக்கமான அப்துல் கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.
முன்னாள் இந்திய ஜனாதிபதியை 2006 இல் ராஸ்டரபதி பவனில் சந்திப்பதற்கு கொடுக்கப்பட்ட அரியவாய்ப்பை தவறவிட்டமை எனக்கு இன்றும் மனவருத்தத்திற்கு உரியதாக இருக்கிறது.




### 3. பாரிசில் Vélib சுதந்திர மிதியுந்தைத் தொடர்ந்து Autolib சுதந்திர சிற்றுந்து

தேவைக்கு ஏற்ப எங்காவது மிதியுந்து – மிதிவண்டி - ஈருளி என்கிற சைக்கிளை கிட்ட உள்ள சைக்கிள் தரிப்பிடத்தில் இரவல் எடுத்து தேவை முடிந்ததும் எங்காவது ஒரு தரிப்பிடத்தில் அதை விட்டுச் செல்லும் சுதந்திர மிதியுந்து சேவை **Vélib** என அழைக்கப்படுகிறது. இந்த வசதியைப் பாரிசு மாநகரசபை பாரிசில்2007 ஜுலையிலிருந்து பாவனைக்கு விட்டு நல்ல பெயரை எடுத்திருக்கிறது. தொடக்கத்தில் 7500 மிதியுந்துகளை 750 தரிப்பிடங்களில் மக்களின் பயன்பாட்டுக்கு விட்டிருந்தது. ஆனால் தற்போது 20 600 மிதியுந்துகளை 1205 தரிப்பிடங்களில் நிறுத்தியிருக்கிறது. **Vélib** என்ற புதிய சொல் **Vélo + liberté** ஆகிய இரு சொற்களின் கலப்பால் உருவானது. Nylon, Motel போன்ற சொற்களும் இரண்டு சொற்களின் கலப்பினால உருவானவை.

சுதந்திர மிதியுந்தைத் தொடர்ந்து விரைவில் சுதந்திர சிற்றுந்து சேவையும் **Car2Go** எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. 600 **SMART** சிறியசிற்றுந்துகள் பாரிசு நகரத்தில் 140 தரிப்பிடங்களில் சேவையில் விடப்பட இருக்கின்றன. இதன் வாடகை 19 சதம்/நிமிடம், 9.90 யூரோ/மணித்தியாலம், 49 யூரோ/ நாள். காப்புறுதியும் டீசல் எரிபொருளும் இதற்குள் அடக்கம். இதனை ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமப் பத்திரம் அவசியம்.




### 4. இலக்கணம் மாற இலக்கணங்கள் உருவாகின்றன

«காலம் அனைத்தையும் மாற்றுகிறது. இந்த உலகவிதிமுறைக்கு மொழியும் தப்பமுடியாது» என்று மொழியியலின் தந்தையான Ferdinand de Saussure போந்தார். இந்த நடைமுறை உண்மைக்கு மொழியும் விதிவிலக்கு அல்ல!சொல்லும் விதிவிலக்கல்ல!! இலக்கணமும் விதிவிலக்கல்ல!!! மொழியியல் அறிவின் வளர்ச்சியைப் பொறுத்து, மரபுஇலக்கணம், இலக்கு(எழுத்து)முறை இலக்கணம், விவரண (விளக்கமுறை) இலக்கணம், போதனா இலக்கணம், குறிப்பு இலக்கணம், கொள்கையில் இலக்கணம், மாற்றிலக்கணம், பொதுமொழி இலக்கணம், தனிமொழி இலக்கணம் என பலவகை இலக்கணங்கள் உள்ளன. மொழியை மொழியால் விளக்குகின்ற ஒரு கலையே இலக்கணம்.


### 5. உலகின் முதற் தமிழ்ப்பேராசிரியர் விபுலானந்த அடிகள்

[ தோற்றம் : 1892 காரைதீவு, மட்டக்களப்பு – மறைவு : 1947 மட்டக்களப்பு ] விபுலானந்த அடிகளின் இளமைப்பெயர் தம்பிப்பிள்ளை, பின்னர் மாற்றி இடப்பட்ட பெயர் மயில்வாகனன். சாதாரண தமிழ் ஆசிரியனாக தனது கல்விப்பணியைத் தொடங்கிய அடிகளார் பாடசாலை அதிபராகி பல்கலைக்கழக விரிவுரையாளராகி, மதுரைத்தமிழ்ச்சங்க பண்டிதராகி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப்பேராசிரியராகி, கலைப்பீடாதிபதியாகி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப்பேராசிரியராகவும் இலங்கியவர் விபுலானந்த அடிகள். முத்தமிழ் வித்தகர் தயாரித்து வழங்கிய பாடத்திட்டமே சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழாராய்ச்சித்துறைக்கு பாடத்திட்டம் ஆனது என்பது பெருமைக்கு உரித்தானது. பச்சையப்பன் கல்லூரியின் சொல்லாக்கக்கழகத்தின் பொதுத்தலைவராக வீற்றிருக்கத் தகைமை பெற்றிருந்தார்.

தூங்கிக்கிடக்கும் ஒரு சமூகத்தை விழித்தெழச் செய்யக்கூடிய அருமருந்து கல்விதான் என்பதை உணர்ந்து தன் வாழ்நாளின் பெரும் பகுதியை கல்வித்தொண்டு புரிவதற்கு அர்ப்பணித்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 இல் நிறுவப்பட்டதில் முத்தமிழ் வித்தகரின் பங்களிப்பும் உண்டு. பெண்களின் கல்விக்காக காரைதீவில் சாரதா பெண்கள் வித்தியாலயத்தையும் கல்லடியில் சிவானந்த வித்தியாலயத்தையும் நிறுவிய கல்விமான். ஆதரவற்ற சிறுவர்களுக்காக கல்லடியில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தை அமைத்த புண்ணியவான்.




# வெளிநாட்டவர் வருகை மற்றும் குடியுரிமை வழங்கலை கட்டுப்படுத்த பிரான்சில் மேலும் நடவடிக்கை




பிரான்சில் தற்போது 37 இலட்சம் வெளிநாட்டு மக்கள் உள்ளதாக கணிக்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஜேர்மனி, ஸ்பெயின், இங்கிலாந்து, இத்தாலி நாடுகளை அடுத்து வெளிநாட்டினர் தொகையைப் பொறுத்த மட்டில் 5ம் இடத்தில் பிரான்ஸ் உள்ளது. ஆனால் மற்றைய ஐரோப்பிய நாடுகளை விட பிரான்சில் குடியுரிமை வழங்கப்படும் வீதம் கூடுதலாக உள்ளது என அரசு எண்ணுகின்றது.

இந்த நிலையை மாற்றி அமைக்கும் நோக்குடன் வெளிநாட்டவர் வருகை மற்றும் பிரெஞ்சு குடியுரிமை வழங்கல் சம்பந்தமாக ஆலோசிக்கப்படுகின்ற சட்ட மூலங்களின் விபரங்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ளது. வெளிநாட்டவரின் வருகையைக் கட்டுப்படுத்து முகமாக பல திட்டங்களை அரசு ஆலோசிக்கின்றது.

விமான நிலையங்களில் வந்திறங்குவோரை வெளியில் விடாமல் விமான நிலையத்தில் அதற்காக ஏற்படுத்தப்படும் பகுதியிலேயே தடுத்து வைத்து நீதிமன்றம் சாதகமான தீர்ப்பை வழங்கி இருந்தால் மாத்திரம் பிரான்சிற்குள் வர அனுமதித்தல். நீதிமன்றம் அனுமதிக்காவிட்டால் நாட்டை விட்டு திருப்பியனுப்புதல்.

தற்போது இரண்டு நாட்கள் வரை தடுத்து வைத்திருக்க முடியும். அல்லது விசாரணை என 5 நாட்கள் வரை தடுத்து வைத்திருக்க முடியும். அதை 32 நாட்களில் இருந்து 45 நாட்கள் வரை தடுத்து வைப்பதற்கு புதிய சட்ட மசோதா வழி வகுக்கும்.

அத்துடன் வெளிநாட்டவர் ஒருவர் பொதுஜனப் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவித்தாலோ அல்லது களவு ஒன்றில் தண்டிக்கப்பட்டாலோ அல்லது சட்ட விரோதமாக அரச நிலத்தில் இருந்தாலோ அவர்களை நாடு கடத்த முடியும். இச் சட்டமூலம் ரோம மக்களை குறிவைத்தே கொண்டு வரப்படுவதாக சொல்லப்படுகின்றது.

மேலும் நாடு கடத்தப்பட்ட ஒருவர் பிரான்ஸ் நாட்டில் இரண்டு வருடத்திற்குள்ளாக மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டால் அவரை தற்போது நாடுகடத்த முடியும். புதிய சட்டமூலத்தின்படி நாடு கடத்தப்பட்ட ஒருவர் மனிதாபிமானக் காரணங்கள் இல்லாவிட்டால் 5 ஆண்டுகளின் பின்னரேயே மீண்டும் நாட்டிற்குள் வரமுடியும்.

இவ்வாறு அரசு கடுமையான சட்டங்கள் கொண்டு வருவதன் மூலம் வெளிநாட்டினரின் எண்ணிக் கையைக் குறைத்து குடியுரிமை வழங்குபவர்களின் எண்ணிக்கை யையும் கட்டுக்குள் வைத்திருக்க முயல்கின்றது.

தற்போது பிரான்சில் உள்ள வெளிநாட்டவர்களில் வருடாந்தம் 4,4 வீதமான மக்கள் பிரெஞ்சு குடியுரிமையை பெறுகின்றனர். 2004ம் ஆண்டில் ஆகக் கூடுதலாக 168845 பேர் குடியுரிமை பெற்றுள்ளனர். மற்றைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது பிரான்ஸ் இலகுவாக குடியுரிமையை வழங்குவதாகவும் கருத்துள்ளது.

ஆனால் பிரான்சில் குடியுரிமைக்கு விண்ணப்பிப் பவர்கள் பிரான்சில் பிறந்தவர்கள் என்றும் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் என்றும் இரண்டு பிரிவாகப் பிரித்து அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. பிரான்ஸ் நாட்டில் பிறந்தவர்களின் விண்ணப்பங்கள் ஒப்பீட்டளவில் குறைவான காலத்தில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

மற்றையோரின் விண்ணப்பங்கள் ஏறத்தாள அவர்கள் வாழ்ந்த 10 வருட காலத்திற்குமான விபரங்களை பெரிய கட்டாக பொலிஸ் துறையினர் வாங்கி வைத்துக்கொண்டு முடிவுகளை எடுப்பதற்கு பல ஆண்டுகளை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். இந்த சூழ்நிலையில் குடியுரிமை வழங்கலை கட்டுப்படுத்த மேலும் சட்டமூலங்கள் வரவுள்ளன.

இதைவிடவும், பிரெஞ்சுக்குடியுரிமைபெற்று 10 ஆண்டுகளுள் அவர்கள் பாரியகுற்றமிழைத்தால் அவர்களின் குடியுரிமையைப் பறிக்க வழிவகைசெய்யும் சரத்தும் புதியதிட்டவரைவில் உள்ளடக்கப்பட்டு பரிசீலணையில் உள்ளது.

பொலிஸார், தீயணைப்பு படையினர், நீதவான் போனறோர் மீதான தாக்குதல்கள் பாரிய குற்றமாக கருதப்படுகிறது. இச்சட்டமூலம் பிரான்ஸின் 5வது குடியரசு சட்டத்தின் முதலாவது பிரிவை மீறுவதால் வாக்கெடுப்பின் பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும்.




சங்கீதா அச்சகம்

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான
அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

Tél./Fax : 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




39 Bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE